பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
21 08 2024 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, போலந்து மற்றும் யுக்ரைன் நாடுகளுக்கு மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புறப்பட்டுச் செல்கிறார்.

2. தமிழகத்திற்கு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு வழங்கியதை விட மத்திய அரசு ஏழு மடங்கு கூடுதல் நிதி வழங்கியிருப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. உலக அளவில் அனைத்து துறைகளிலும் தமிழர்கள் சிறந்து விளங்குவதாக மாநில தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

4. கோவை, நீலகிரி உட்பட மாநிலத்தின் ஐந்து மாவட்டங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்தாக வானிலை ஆயவு மையம் தெரிவித்துள்ளது.

5. பங்களாதேஷில் நடைபெற இருந்த மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்டி உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகளை ஐக்கிய அரபு எமிரேட்சில் நடத்த ஐ.சி.சி. முடிவு செய்துள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<>>>>**

பிரதமர் திரு. நரேந்திர மோடி மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக போலந்து மற்றும் யுக்ரைன் நாடுகளுக்கு இன்று புறப்பட்டுச் செல்கிறார்.

போலந்து தலைநகர் வார்சாவில் பிரதமருக்கு ராணுவ அணிவகுப்புடன் பாரம்பரிய முறையிலான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

போலந்து பிரதமர் திரு. **Donald Tusk** உடன் இருதரப்பு பேச்சுகள் நடத்தும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, அந்நாட்டு அதிபர் **Andrzej Duda**-வையும் சந்தித்துப் பேச உள்ளார்.

பின்னர் அங்கு வாழும் இந்திய சமூகத்தினருடன் கலந்துரையாடும் பிரதமர், வர்த்தக தலைவர்கள் உள்ளிட்டோரையும் சந்திக்க இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

போலந்துடனான இருதரப்பு உறவுகள் ஏற்பட்டு 70வது ஆண்டு நடைபெறும் நிலையில், 45 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியப் பிரதமர் அந்நாட்டுக்கு செல்வது இதுவே முதல் முறையாகும்.

போலந்து பயணத்தை தொடர்ந்து, யுக்ரைன் அதிபர் திரு. வொலோடிமிர் ஜெலன்ஸ்கி அழைப்பை ஏற்று பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை மறுநாள் அந்நாட்டுக்கு செல்கிறார்.

கடந்த 1992ஆம் ஆண்டில் யுக்ரைனுடன் ராஜ்ஜிய உறவுகள் ஏற்பட்ட பிறகு அந்நாட்டுக்குச் செல்லும் முதல் இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

யுக்ரைன் அதிபருடன் அரசியல், வர்த்தகம், பொருளாதாரம், முதலீடு, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில் நல்லுறவை அதிகரிப்பது குறித்து பிரதமர் பேச்சு நடத்த உள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

<<<<>>>>

ஜவுளித்துறையின் வளர்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கு மத்திய அரசு ஆதரவு அளிப்பதற்கு உறுதிபூண்டிருப்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று ஜவுளி தொடர்பான தொழில்களில் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை பெறும் பயனாளிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

அப்போது ஜவுளித்துறை எதிர்கொள்ளும் பல்வேறு சவால்கள் மற்றும் இத்துறையில் அர்ப்பணிப்புடன் கூடிய தங்களின் உழைப்பு குறித்து தொழிலாளர்கள் மத்திய அமைச்சரிடம் எடுத்துக் கூறினர்.

ஜவுளித்துறைக்கு அவர்கள் அளித்து வரும் பங்களிப்புக்கு அமைச்சர் பாராட்டு தெரிவித்தார்.

இந்தத் தொழிலில் அதிக முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளில் ஜவுளித் தொழிலாளர்கள் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என்றும், அவர்களுக்குத் தேவையான உதவிகளை அரசு தொடர்ந்து அளிக்கும் என்றும் திரு. கிரிராஜ் சிங் உறுதியளித்தார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிஜேபி பொறுப்பாளர்களாக அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ராம்மாதவ், மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜம்மு-கஷ்மீரில் அடுத்த மாதம் 18, 25 மற்றும் அக்டோபர் ஒன்றாம் தேதிகளில் மூன்று கட்டங்களாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது.

முதற்கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது.

<<<<>>>>

உலக அளவில் அனைத்து துறைகளிலும் தமிழர்கள் சிறந்து விளங்குவதாக மாநில தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

கோவையில் நேற்று தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 57வது மாநாட்டில் பங்கேற்று அவர் பேசினார்.

'உலகளாவிய திறன் தலைநகர் தமிழ்நாடு' என்ற கருப்பொருளுடன் இந்த மாநாடு நடைபெறுவது முதலமைச்சரின் எதிர்கால பார்வையை கருத்தில்கொண்டு அமைந்திருப்பதாக அவர் கூறினார்.

தேசிய தரவரிசையில் தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு கல்லூரிகள் இடம்பெற்றுள்ள போதிலும் அனைத்து பட்டதாரிகளுக்கும் போதிய வேலைவாய்ப்பு உருவாக்கப்படவில்லை என்று திரு. பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியாவுக்கும் - மலேசியாவுவுக்கும் இடையேயான நல்லுறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கான முடிவு குறித்து குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்துள்ள மலேசிய பிரதமர் திரு. டத்தோ செரி அன்வர் பின் இப்ராஹிம் நேற்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை அவரது மாளிகையில் சந்தித்து பேசினார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகளை மேம்படுத்துவதில் ஜனநாயகம், பன்முக கலாச்சாரம், பன்முகத்தன்மை, பரஸ்பர மரியாதை போன்ற முக்கிய அம்சங்கள் அடிப்படையாக அமைந்துள்ளதாக அப்போது திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

ஆசியான் அமைப்பில் குறிப்பிடத்தக்க நாடாகவும், இந்தியா – பசிபிக் மற்றும் கிழக்கு நோக்கிய கொள்கை என்ற நிலைப்பாட்டில் முக்கியப் பங்கு வகிக்கும் மலேசியாவுடன் இணைந்து செயல்பட இந்தியா உறுதிபூண்டிருப்பதாகவும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

முன்னதாக நேற்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை மலேசிய பிரதமர் சந்தித்து இருதரப்பு பேச்சுகள் நடத்தினார்.

<<<<>>>>

தமிழகத்திற்கு மத்திய அரசு ஒவ்வொரு நிதியாண்டிலும் கூடுதல் நிதியை வழங்கி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசைக் காட்டிலும் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு ஏழு மடங்கு அதிக நிதி வழங்கியிருப்பதாக கூறினார்.

<<<<>>>>

விழுப்புரம் - நாகப்பட்டினம் இடையே 179 கிலோ மீட்டர் தொலைவுக்கு மத்திய அரசின் பாரத் மாலா திட்டத்தின்கீழ் 6 ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவில் நான்கு வழிச்சாலை அமைக்கும் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

இந்தப் பணிகள் முடிவடைந்தால் விழுப்புரத்தில் இருந்து அனைத்துப் பகுதிகளுக்கும் பயண நேரம் வெகுவாக குறையும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில் உள்ள குடிசைகளை முழுவதுமாக மாற்றி அனைவருக்கும் நிரந்த கான்கிரீட் வீடுகள் கட்டித் தருவதே மாநில அரசின் நோக்கம் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூரில் நேற்று கருணாநிதி கனவு இல்லத் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு புதிய வீடுகள் கட்டுவதற்கான ஆணைகளை வழங்கி அவர் பேசினார்.

இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் பாதுகாப்பான, நிரந்தர கான்கிரீட் வீடுகள் கட்டித்தருவதாகும் என்று குறிப்பிட்டார்.

வீடுகள் இல்லாத ஏழை எளிய மக்களைக் கண்டறிந்து ஊரக வளர்ச்சி முகமை மூலம் 360 சதுர அடியில் மூன்றரை லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டித் தரப்படுவதாக அவர் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தின் உள் மாவட்டங்களில் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளது.

கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, திருப்பூர், தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த மாவட்டங்களின் ஒருசில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும், வரும் 26ஆம் தேதி வரை மாநிலத்தின் ஓரிரு பகுதிகளிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, ஹரியானா மாநிலம் ஃபரிதாபாதில் ஜே.சி. போஸ் அறிவியல் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று பங்கேற்கிறார்.

<<<<>>>>

புதுதில்லியில் இன்று நடைபெறும் இந்திய தொழில் கூட்டமைப்பான சி.ஐ.ஐ. இந்திய – ஆப்பிரிக்க வர்த்தக மாநாட்டில் குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் உரையாற்றுகிறார்.

<<<<>>>>

ஐரோப்பிய யூனியன் - இந்தியா இடையே மண்டல அளவிலான மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

மத்திய மற்றும் மாநில ஜி.எஸ்.டி. அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்ற இரண்டாவது தேசிய மாநாடு புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

ஊழியர்கள் வருங்கால வைப்பு நிதி நிறுவனமான இ.பி.எஃப். நிறுவனத்தில், கடந்த ஜூன் மாதத்தில் 19 லட்சத்து 29 ஆயிரம் உறுப்பினர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட ஸ்ரீபெரும்புதூர், குன்றத்தூர் ஆகிய பகுதிகளில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளை சட்டமன்ற பேரவை பொது நிறுவனங்கள் குழு தலைவர் திரு. நந்தகுமார் தலைமையிலான உறுப்பினர்கள் ஆய்வு செய்தனர்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி பார்வை குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் அரசு மேல்நிலைப் பள்ளியில் இலவச ஆன்லைன் பேருந்து பயண அட்டை வழங்குவதற்கான சிறப்பு முகாம் தொடங்கியுள்ளது.

<<<<>>>>

சிவகங்கை மாவட்ட தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர் துறை சார்பில் ஏற்றுமதிக்கு உகந்த மிளகாய் சாகுபடி தொழில்நுட்பம் தொடர்பான கருத்தரங்கு ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உட்பட்ட கல்லூரிப் பேராசிரியர்களுக்கு கல்விக் கடன் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி முகாம் மாவட்ட ஆட்சியர் திருமதி அழகு மீனா தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் ‘உங்களைத் தேடி உங்கள் ஊரில்’ என்ற திட்டத்தின்கீழ் அரசின் நலத்திட்டங்கள், சேவைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் திரு. எம்.எஸ். பிரசாத் இன்று கள ஆய்வு மேற்கொள்கிறார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பங்களாதேஷில் நடைபெற இருந்த மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்டி உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகளை ஐக்கிய அரபு எமிரேட்சில் நடத்த ஐ.சி.சி. முடிவு செய்துள்ளது.

என்றாலும் அதிகாரபூர்வமாக இப்போட்டிகளை பங்களாதேஷ் கிரிக்கெட் வாரியம் நடத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்டோபர் 3ஆம் தேதி முதல் 20ஆம் தேதி வரை இப்போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், துபாய் மற்றும் ஷார்ஜா ஆகிய நகரங்களில் நடைபெறும் என்று ஐ.சி.சி. தலைமை நிர்வாகி **Geoff Allardice** வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இப்போட்டிகளை பங்களாதேஷில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த நிலையில் அங்கு தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலை காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

**<<<<The End>>>>**